பண்ணுருட்டி நகராட்சி

* 220. வினா —திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பண்ணுருட்டி நகராட்சியை, முதல்நிலை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : துணைத் தலைவரவர்களே. பண்ணுருட்டி நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக மாற்றுவதற்குத் தேவையான மக்கள் தொகை, நிதி வருவாய் இருந்தபோதிலும், அதை முதல் நிலை நகராட்சியாக மாற்றுவதற்குக் காலதாமதம் ஏற்பட என்ன காரணம்? விரை விலே அது முதல் நிலை நகராட்சியாக மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, நக ராட்சியை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதற்குச் சில வழிமுறைகள் இருக்கின்றன. நிதியைப் பொறுத்த மட்டில், கடந்த 3 ஆண்டுகளில் சராசரி ரூ. 25 லட்சம் ஆண்டுக்கு வருமானம் வந்திருக்க வேண்டும். 1983-84-ல் ரூ. 29 இலட்சம் வந்திருக்கிறது. இது பற்றிப் பரிசீலித்து, விரைவிலே முடிவெடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலே இரண் டாம் நிலை நகராட்சிகளாக இருந்து, முதல் நிலை நகராட்சிகளாக தங்களை உயர்த்த வேண்டுமென்று மனுச் செய்திருக்கும் நகராட்சிகள் எத்தனை ? எத்தனை நகராட்சிகள் பற்றி பரிசீலனையில் இருக்கிறது ? எத்தனை நகராட்சிகளை முதல் நிலையாக மாற்றுவதற்குக் கருத்துரு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, பண்ணு ருட்டி பற்றிக் கேட்டதால், அதுபற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது. இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 221, 222 ஒத்தி வைக்கப்படுகின்றன.